Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 67** எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! சங்.8:1 ஆகஸ்ட் 2021 No.8

## மனந்திரும்புதல் புதுமலர்ச்சியின் காலங்களை கொண்டு வருகிறது

### *Repentance brings times of refreshing*

Rich Carmicheal

**வேதபகுதிகள் :** எஸ்றா 9–10; நெகேமியா 8,9.

மனந்திரும்புதல் கர்த்தரிடமிருந்து வரும் ஒரு ஈவு. அவர் நற்குணம் நிறைந்தவர். அவரிடத்தில் நீடிய பொறுமையுண்டு. அவருடைய நற்குணம் நாம் மனந்திரும்ப வழிநடத்துகிறது ரோமர் 2:4. நாம் நமது பாவங்களில் மடிந்து போவது அவரது விருப்பமல்ல. மாறாக நாம் நமது பாவங்களை விட்டு மனந்திரும்பி பரிபூரண ஆவிக்குரிய வாழ்வை அனுபவிக்கவும், புதுமலர்ச்சியின் காலங்களை எதிர்பார்க்கவும் அவர் விரும்புகிறார் (2 பேதுரு 3:9; அப்.3:19).

எஸ்றாவின் நாட்களின் மனந்திரும்புதலின் தாக்கத்தை உதாரணமாகக் கொள்வோம். எஸ்றாவின் புத்தகத்தின் முதல் எட்டு அதிகாரங்களிலும் தேவனுடைய ஜனத்திற்கு நன்மையான காரியங்கள் சம்பவித்துக் கொண்டிருந்ததை வாசிக்கிறோம். அவர்களைத் திரும்ப அழைத்து வருவதைக் குறித்த வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலிலிருந்து சம்பவம் ஆரம்பமாகிறது எரே.29:10,11. பெர்ஸிய அரசன் கோரேஸின் இருதயம் இளக்கமடைந்து நாடு கடத்தப்பட்ட யூதர்கள் மறுபடியும் யூதாவுக்கு வந்து ஆலயத்தைக் கட்ட உத்தரவு பிறப்பிக்கின்றான். அவர்கள் வந்து கர்த்தருடைய கிருபையால் எதிர்ப்புகளை மேற்கொண்டு பலிபீடத்தையும் ஆலயத்தையும் கட்டினர். ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை பண்ணப்பட்டதையும் பஸ்கா ஆசரிக்கப்பட்டதையும் கூறி அந்த அதிகாரம் முடிகிறது.

எஸ்றாவின் செயல்பாடுகள் ஏழாம் அதிகாரத்தில் ஆரம்பிக்கின்றன. அவன் அரசருடைய தயவையும் தேவனுடைய கிருபையையும் பெற்றவனாயிருக்கிறான். மேலும் தேவனுடைய பிரமாணங்களில் வைராக்கியமுடையவன் எஸ்.7:6-10. பூரண விசுவாசமும் தைரியமும் நிறைந்தவனாய் தேவனை சார்ந்து கொண்டு தேவ பாதுகாவலோடு செல்ல விரும்பும் அவன் சேனைகளின் உதவியை நாடவில்லை.

### பாவத்தின் விளைவு

இவ்வாறு நடைபெற்ற சம்பவங்களின் மத்தியில் ஒன்பதாம் அதிகாரத்தில் இடையூறு ஏற்படுவதைக் காண்கிறோம். இஸ்ரவேல் ஜனங்களும், ஆசாரியர்களும், லேவியரும் அந்த தேசத்தின் ஜனங்களுக்கும் அவர்களுடைய அருவருப்பான கிரியைகளுக்கும் விலகியிருக்கவில்லை என்று எஸ்றா கேள்விப்பட்டான் எஸ்றா 9:1-2. அப்பொழுது எஸ்றா எப்படி நடந்து கொண்டான் என்று பாருங்கள். அவன் தன் வஸ்திரத்தையும் சால்வையையும் கிழித்துக்கொண்டு தன் தாடியிலுள்ள மயிரைப் பிடுங்கி, திகைத்தவனாய் உட்கார்ந்திருந்தான். சிலர் அவனோடு கூடிக்கொண்டார்கள். அவனோ அந்திபலி செலுத்தப்படு மட்டும் திகைத்தவனாய் உட்கார்ந்திருந்தான் எஸ்றா.9:3-4.

தம்முடைய ஜனங்கள் தங்களைச் சுற்றிலுமுள்ளவர்களைவிட வேறுபட்டவர்களாயிருக்க தேவன் அழைக்கிறார். புறஜாதிகளோடு சம்பந்தம் கலப்பதால் அவர்கள் அசுத்தம் அடைவார்கள் என்பதும், அவர்கள் சரீர பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் வாழ்வில் கறைபட்டு விடுவார்கள் என்பது அவரது எண்ணம் 9:10-12. மேலும் இவ்வகையான திருமண உறவினால் அவர்கள் தங்கள் இருதயங்களை வேறு தெய்வங்களுக்கு நேராக திருப்பி தேவன் மேலுள்ள பயபக்தியை விட்டு விடுவார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். அவர்கள் வேறுபட்ட ஜனமாயிருந்தால் மட்டுமே தேசத்திற்கு ஒளியாகவும் ஆசீர்வாதங்களுக்கு ஏதுவாகவும் இருக்க முடியும் என்பது அவரது இருதய வாஞ்சை. ஆனால் அண்டை ஜனங்களோடு அவர்கள் சம்பந்தம் கலப்பதால் தேவஜனம் தங்களது அழைப்பிலும் தாக்கத்திலும் பலவீனமடைந்து விடுவார்களே என்ற ஏக்கம் அவரிடமிருந்தது.

### இன்று சபையில் காணப்படும் பலவீனம்

நாம் (தேவ ஜனம்) உலகத்திலிருந்தாலும் உலகத்திற்குரியவர்களல்ல யோவா.17:14-15. விட்டுக்கொடுத்தல் என்ற பலவீனத்தினிமித்தம் அனேக சபைகள் இன்று உலகத்திற்குரியதாகி விட்டன. அதாவது உலகத்திலிருப்பது போன்ற பல பாவங்கள் சபைக்குள் பரவிக் கிடக்கின்றன. உப்பாகவும் ஒளியாகவும் தூய்மையுடன் மாதிரியாக வாழும்படி அழைக்கப்பட்ட சபை தன் தனித்தன்மையை இழந்துவிட்டது. ஏனெனில் லௌகீகத்தை அது தனக்குள் பிரவேசிக்க அனுமதித்துவிட்டது.

பாவம் பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. எனவே இதை உணர்ந்த எஸ்றா கிழிந்த வஸ்திரத்தோடும் சால்வையோடும் முழங்காற்படியிட்டு தன் கரங்களை தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து ஜெபித்தான். "என் தேவனே நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன். எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகிற்று. எங்கள் பிதாக்களின் நாட்கள் முதல் இந்நாள் மட்டும் நாங்கள் பெரிய குற்றத்துக்கு உள்ளாயிருக்கிறோம். எங்கள் குற்றம் வான பரியந்தம் வளர்ந்து போயிற்று. எங்கள் அக்கிரமங்களினிமித்தம் நாங்களும் எங்கள் ராஜாக்களும், எங்கள் ஆசாரியர்களும் இந்நாளிலிருக்கிறதுபோல அன்னிய ராஜாக்களின் கைகளில் வெட்கத்துக்கும் ஒப்புக் கொடுக்கப்பட்டோம்" எஸ்றா 2:6-7. பாவம் அவர்களை இந்த நிலைக்கு கொண்டு வந்தது என்று எஸ்றா அறிந்தான். அவர்கள் திரும்பி வந்தாலும் மீண்டும் பாவம் செய்தால் தேவன் அவர்களுக்கென்று வைத்திருக்கும் நன்மையான காரியங்களை இழந்து போவார்கள் 9:13-14. தேவன் தமது ஜனத்துக்கு கிருபையுள்ளவராயிருந்தபடியால் அவர்கள் அக்கிரமத்துக்குத்தக்கதாக அவர்களை தண்டியாமல் இரக்கமாக மன்னித்து மறுபடியும் புதியதொரு வாழ்வை அளித்ததாக வச.9 கூறுகிறது. ஆகவே மறுபடியும் தேவ பிள்ளைகள் பாவம் செய்வது தேவ கிருபையை அவமதிப்பதாகும். தேவன் தமது ஜனத்துக்கு வைத்திருக்கும் திட்டங்களும் நோக்கங்களும் ஆபத்திலிருப்பதை எஸ்றா உணர்ந்தான்.

பாவத்தின் விளைவைக் குறித்து எஸ்றாவைப் போன்ற கரிசனை உங்களுக்கு உண்டா? பாவத்தினாலே உங்கள் சபையிலோ உங்கள் வாழ்விலோ ஏற்படும் விளைவுகளை உணருகிறீர்களா?

### இன்னும் நம்பிக்கையுண்டு

எஸ்றா இவ்வாறு தன்னை தாழ்த்தி பாவ அறிக்கை செய்து ஜெபித்த போது ஒரு கூட்டம் ஆண்களும் பெண்களும் கூட புலம்பி அழ ஆரம்பித்தனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

**அன்பான வேண்டுகோள்**

**வங்கி** வழியாக காணிக்கை அனுப்பினால் தயவுசெய்து உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். காணிக்கையை உங்கள் பெயரில் வரவு வைக்கவும், ரசீது அனுப்பவும், அடுத்த ஆண்டு பத்திரிகை அனுப்பவும் அது அவசியம்

**மொபைல் : 95432 21008**
**வாட்ஸ்அப் : 94897 40295**

# வருகையின் தூதன்

ஆசிரியர்:

வெஸ்லி தேவதாசன்

(Former Editor : S.Devadason 1955 - 1999)


Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

## இம்மாத பொன்னான சிந்தனை

அமெரிக்காவில் 20.02.2021 அன்று ஒரு விமானம் விண்ணில் பறந்து கொண்டிருக்கும்போது அதன் ஒரு இன்ஜினில் தீ பிடித்தது. ஜன்னல் வழியாக தீயைப் பார்த்த பயணிகள் பயந்து அலறினர். அப்பொழுது விமான ஓட்டியின் (Pilot) குரல் கேட்டது. அவர் கூறினார், “நீங்கள் பயப்பட வேண்டாம்; நான்கு நிமிடங்களில் நான் உங்களை விமான நிலையத்தில் இறக்கி விடுவேன்”. பயணிகள் தைரியம் அடைந்து அமைதியாயினர். சொன்னவண்ணம் விமான ஓட்டி ஒரு உயிர் சேதமும் இல்லாமல் விமானத்தை விமான நிலையத்தில் தரையில் இறக்கினார். பிரியமான சகோதர சகோதரிகளே, எல்லாம் அறிந்தவர், நமது பாடுகளையும் இக்கட்டுகளையும் அறிந்த ஆண்டவர் இயேசு நம்மைச் சேதமில்லாமல் காத்துக்கொள்வார்.

## வாக்குத்தத்தம்

“மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் **என் கிருபை** உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.

“சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே,

“உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.

“நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்;
கொடுமைக்குத் தூரமாவாய்;
பயமில்லாதிருப்பாய்;
திகிலுக்குத் தூரமாவாய்,
அது உன்னை அணுகுவதில்லை” ஏசாயா 54:10-14

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,*

**பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.**

கடந்த மாத பத்திரிகையில் எழுதினது போல கடைசி வரை பத்திரிகை அச்சிட இயலவில்லை. எனவே அதே செய்திகளை ஜூலை 2021 No.7 என்று அச்சிட்டு அனுப்பினோம்.

**2021 ஆகஸ்ட்** மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன். கீழே அச்சிடப்பட்டுள்ள தினசரி பத்திரிகை செய்திகளை நீங்களும் படித்து ஜெபியுங்கள்.

**கொரோனா 2-வது அலை பரவலுக்கு சட்டசபை தேர்தல்தான் காரணம்**

மாநகராட்சி தேர்தலை நடத்தக்கோரிய வழக்கில்
மதுரை ஐகோர்ட் நீதிபதிகள் கருத்து

(தினத்தந்தி ஜுன் 24)

**செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் கொரோனா 3-வது அலை தாக்கும்**

கான்பூர் ஐ.ஐ.டி நிபுணர்கள் கணிப்பு

(தினத்தந்தி ஜுன் 22)

* * * * *

வாக்குத்தத்த வசனத்தை அழகுபடுத்தும்விதமாக ஒரு பாடலை கீழே அச்சிடுகிறேன். விருப்பமுள்ளவர்கள் You tube வழியாக பாடலை கேட்கலாம்.

நம்புவேன் என் இயேசு ஒருவரை
நம்புவேன் என் இயேசு ஒருவரை

1. என் பாதை எல்லாம் அந்தகாரம் சூழ்ந்தாலும்
வாழ்க்கை முடிந்தது மறுவாழ்வு இல்லை என்றாலும்
என்னை தேற்றுவதற்கு யாரும் இல்லை என்றாலும்
நம்புவேன் என் இயேசு ஒருவரை

2. நான் நிற்கும் பூமி நிலைகுலைந்து அழிந்தாலும்
என் நம்பிக்கையின் அஸ்திபாரம் அசைந்தாலும்
நான் நம்புவதற்கு ஒன்றும் இல்லை என்றாலும்
நம்புவேன் என் இயேசு ஒருவரை

## *Only five minutes more*

பரீட்சை (Exam) எழுதும் மாணவர்களை எச்சரிப்பதற்காக, அவர்களை மேற்பார்வையிடும் ஆசிரியர் அல்லது பேராசிரியர், “இன்னமும் ஐந்து நிமிடங்கள் மட்டுமே உள்ளது” என்பார்கள். அதுபோல 2021-ம் ஆண்டு முடிய இன்னமும் 5 மாதங்கள் மட்டுமே உள்ளது என்று எழுதுகிறேன். “என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது” என்கிறார் வாழ்க்கையில் மிகவும் நெருக்கப்பட்ட யோபு (7:6). இம்மாதம் மூன்று காரியங்களை எழுதுகிறேன்.

## I. ஆசீர்வாதம்

மேய் மாத இறுதியில் பொருளாதாரத்திற்கு (finance) என்ன செய்வேன் என்று திகைத்தபோது, சில தேவனுடைய பிள்ளைகள் கர்த்தரால் ஏவப்பட்டு **மிகவும் உதாரத்துவமான காணிக்கைகளை** வங்கி வழியாகவும், காசோலைகள் மூலமாகவும் அனுப்பினார்கள். அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் அனுப்பின அனைத்து காணிக்கைகளுக்காகவும் கர்த்தரை கண்ணீரோடு துதிக்கிறேன். ஒவ்வொரு ரசீதுக்காகவும் உங்கள் சகோதரன் தனித்தனியாக பாரத்தோடு ஜெபித்து அனுப்புகிறேன். தேவன் உங்களை அதிகமாக ஆசீர்வதிப்பாராக. உங்கள் எல்லா தேவைகளையும் கிருபையாய் சந்திப்பாராக. வியாதிகளை நீக்குவாராக. அற்புதம் செய்வாராக. பிரச்சனைகளை மாற்றுவாராக. துக்கம், துயரம், கண்ணீர் அனைத்தையும் அகற்றுவாராக. ஆமென்.

உடனே உங்களுக்கு ஒரு கம்ப்யூட்டர் ரசீது மாத்திரம் அனுப்பப்படுகிறது. ஆண்டவருக்குச் சித்தமானால், ஆண்டு இறுதியில் அழகான **நன்றி/ஜெப** கடிதம் கட்டாயம் அனுப்புவோம்.

**“ஏனென்றால் உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே”**

**“நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றார்”** எபிரேயர் 6:10,14.

(7-ம் பக்கம் பார்க்க)


**கடிதம், மணியாடர், கொரியர்** அனுப்ப வேண்டிய முகவரி:

| | |
|---|---|
| **வருகையின் தூதன்** | **VARUKAYIN THOOTHAN** |
| நியூபோர்ட் தெரு, | Newport Street, |
| நாகர்கோவில் – 629 001. | Nagercoil-629 001. |
| **Ph. :** 95432 21008 | **Ph. :** 95432 21008 |

**காசோலை** *(Cheque & Draft)*

**வெஸ்லி தேவதாசன்** (WESLEY DEVADASON)

என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

**வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்**

உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்

Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

**பத்திரிகை பணி**

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
**Punjab National Bank**, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

**வருகையின் தூதன் உபவாச ஊழியம்**

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
**I.O.B.**, Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

**முன்னேற்றப்பணி**

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
**Canara Bank**, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

இப்போது ஒரு அதிசயம் நடைபெற்றது. அவர்களில் ஒருவனாகிய செக்கனியா என்பவன் ".... ஆகிலும் இப்பொழுது இந்த காரியத்தில் இன்னும் இஸ்ரவேலுக்கு நம்பிக்கை உண்டு" 10:2 என்றான்.

எத்தனை உறுதியான வாக்கியம்! சூழ்நிலை எப்படியிருந்தாலும் தேவ ஜனத்திற்கு நம்பிக்கை இருக்கிறது. காரணம் நமது தேவன் நம்பிக்கையின் தேவன். அவர் மன்னிக்கிறவரும், கிருபை, பொறுமை, இரக்கம், அன்பு ஆகிய பண்புகள் நிறைந்தவருமாயிருக்கிறார். நாம் நமது பாவங்களிலிருந்து திரும்புவதே அவரது விருப்பம். எஸ்றா காலத்தில் இவ்வளவு நம்பிக்கையிருந்தால் இக்காலத்தில் வாழும் நாம் கிறிஸ்துவில் எவ்வளவாக நம்பிக்கை வைக்க வேண்டும்! "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினால் பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" எபேசி.1:7. "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" 1யோ.1:9.

எஸ்றா, மக்கள் பாவ அறிக்கை செய்யவும், மனந்திரும்பவும் அவர்களை வழிநடத்தினான். அவர்களது பாவம் எண்ணிக்கையில் அதிகமாகவும், சிக்கல் நிறைந்ததாகவுமிருந்தது. ஆனால் அவர்கள் தேவகட்டளையை மதித்து உத்தமமாக கீழ்ப்படிந்தார்கள் 10:10.

### தேவ வார்த்தையின் நிறைவேறுதல்

நெகேமியாவின் புத்தகத்திலும் ஜனங்களின் பாவ அறிக்கை, மனந்திரும்புதல் ஆகியவற்றின் பலன் கூறப்படுகிறது. அப்புத்தகத்தின் முதற்பகுதியில் தேவன் தமது ஜனங்கள் எருசலேமில் மதில்களைக் கட்ட உதவி செய்கிறதைப் படிக்கிறோம். எட்டாவது அதிகாரத்தில் ஜனங்கள் கூடிவந்து எஸ்றாவிடம் நியாயப்பிரமாணத்தைக் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன்படி எஸ்றா நியாயப்பிரமாணத்தைக் கொண்டு வந்து காலையிலிருந்து மத்தியானம் வரை அதை சத்தமாக வாசித்தான். அவன் மரத்தால் செய்யப்பட்ட ஒரு மேடைமீது நின்று வாசித்தபோது தேவனுக்கும் அவரது வார்த்தைக்கும் ஜனங்கள் அதிக கனம் செலுத்தினார்கள். அவன் புத்தகத்தைத் திறந்தபோது அவர்கள் எழுந்து நின்றார்கள். எஸ்றா தேவனைத் துதித்த போது ஜனங்கள் தங்கள் கரங்களை உயர்த்தி ஆமென், ஆமென் என்றனர். தலைகுனிந்து ஆண்டவரை ஆராதித் தனர் நெகே.8:5-6.

இன்று தேவ வசனம் இவ்வாறு கனம் பண்ணப்படுகிறதா? கூட்டமாகவோ தனியாகவோ வேதவசனம் வாசிக்கப்படும்போது பயபக்தியுடனிருக்கிறோமா? சத்திய வேதத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறோமா? 2 தீமோ.2:15. "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு" 2 தீமோ.4:2. இப்படி பிரசங்கிக்கிற மனதுள்ள அனேகர் வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தை வளர்ப்பதும் மக்களை மனந்திரும்பச் செய்வதுமான வலுவான செய்திகள் தேவை.

தனி வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சபை வாழ்விலும் தேவ வசனம் மையமாயிருக்க வேண்டும். தேவ வசனத்தை பயபக்தியாக எண்ணின எஸ்றாவை அனுப்பி எருசலேமைத் திரும்பக் கட்டும்படி செய்தது மக்களுக்கு தேவனளித்த ஒரு பெரிய பரிசு. பலிபீடம், ஆலயம், மதில் யாவும் கட்டி எழுப்பப்படவும் தமது ஜனங்கள் எஸ்றா மூலம் தமது வார்த்தையை கேட்கவும் அவன் அனுப்பப்பட்டான்.

### தேவ வசனத்தின் செயல் களிகூருதலும் மனந்திரும்புதலும்

ஜனங்கள் நியாயப் பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது துக்கித்து அழுதார்கள் நெகே.8:9-10. அதற்கு முக்கிய காரணம் அவர்கள் ஆண்டவரிடமிருந்தும், அவரது விருப்பங்களிலிருந்தும் அதிகமாக விலகிச் சென்றுவிட்டனர் என்பதுதான். லேவியர் அவர்கள் விசாரப்பட வேண்டாம் என்று ஆறுதல்படுத்தினார்கள் நெகே.8:10-12.

தேவ வசனத்தை நாம் ஏற்றுக் கொள்ளும்போது, பாவ உணர்வு ஏற்பட்டு நமது குறைகளையும், பாவங்களையும் நாம் அறிந்து கொள்ளச் செய்கிறது. இவ்வாறு வேதவசனம் நமக்கு பகிர்ந்து கொள்ளப்படுவது ஒரு ஈவு. வெளி.3:14-22 வசனங்களில் லவோதிக்கேயா சபைக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாடு எழுதப்பட்டுள்ளது. அது வெதுவெதுப்பான நிலையிலிருப்பதாகவும், நிர்பாக்கியமுள்ளதாகவும், பரிதபிக்கப்படத்தக்கதாகவும், தரித்திரமும், கண்பார்வையற்றும், நிர்வாணமாகவும் காணப்பட்டது. ஆனாலும் இக்குறைகள் குற்றப்படுத்துவதற்காகவும் அழிப்பதற்காகவும் அல்ல மனந்திரும்புவதற்கான கண்டிப்பாகவே அறிவிக்கப்பட்டன. தேவன் தமது வலுவான அன்பினால் சபை அவரது அன்னியோன்னியத்தை அனுபவிக்க எதிர்பார்க்கிறவராயிருக்கிறார் வச.19-20.

நாம் பிழைதிருத்தப்படும்படி அழைக்கப்பட்டால் ஜாக்கிரதையுடன் மனந்திரும்ப வேண்டும். நெகேமியாவின் வரலாற்றிலே நாம் காண்கிறபடி ஜனங்கள் கூடி வசனத்தைக் கேட்டு பாவ அறிக்கை செய்து பின் தேவனை ஆராதித்தனர் நெகே.9:3. தங்கள் முன்னோர்களின் பாவங்களையும் அறிக்கையிட்டனர். இந்த பாவங்கள் அவர்கள் அனுபவித்த கடினபாடுகளுக்குக் காரணமும் தேவன் நியமித்திருந்த அளவில்லா ஆசீர்வாதங்களுக்கு தடையாயுமிருந்தன என்பதை ஒத்துக் கொண்டனர் 9:32-37.

அதிகமான பாவ உணர்வால் அவர்கள் தேவனுக்கு நேராக திரும்பினார்கள். ஆழ்ந்த கரிசனையோடு ஒரு உடன்படிக்கையை எழுத்தின் மூலம் பண்ணிக்கொண்டனர் 9:38. அதேநாளில் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவும் தங்களை அர்ப்பணித்தனர். இந்த இதயபூர்வ செயல்களால் அவர்கள் அதிக மனமகிழ்ச்சியடைந்தனர்.

### முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும்

புது மலர்ச்சியின் காலங்களை அவரிடமிருந்து பெற்று அனுபவிக்க மனந்திரும்ப வேண்டும். அதற்காக நாம் அழைக்கப்படுவதை உணரும்போது அவர் நம்மீதுள்ள அன்பினாலேயே நம்மை அழைக்கிறார் என்று உணர்ந்து அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். மிகுந்த உத்தமத்துடனும், நேர்மையுடனும் பிரதிபலிக்க வேண்டும். பாவத்தை எளிதாக எண்ணக்கூடாது. நாம் பரிசுத்த ஜனமாயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் மூலமாக அவருடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். ஆக பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்புகிறவர்களுக்கு ஆசீர்வாதங்களை அருளிச் செய்ய அவர் உத்தமமும் ஆவலுமுள்ளவராயிருக்கிறார்.

## புனிதமான நங்கூரம்

*The Sacred anchor*

Thomas Watson (1620-1686)

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகா தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" தீத்து.2:13.

ஒரு கிறிஸ்தவனின் முக்கியமான சந்தோஷம் அவனது எதிர்காலத்தில்தான் இருக்கிறது. ஒரு பரிசுத்தவான் பரலோக வாழ்வை எதிர்பார்க்கிறவனாகவும் அவன் வெறுங்கையனாயிருந்தாலும் அதிக நம்பிக்கையுடையவனாகவும் வாழுவான். எனவேதான் வசனம், ஆனந்த பாக்கியத்தை எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிடுகிறது.

### நம்பிக்கை என்றால் என்ன?

நம்பிக்கை என்பது இயற்கைக்கு மேலான ஒரு கிருபை. தேவ ஆவியால் அது நமது இருதயங்களில் நாட்டப்பட்டுள்ளது. கிறிஸ்தவன் வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை எதிர்பார்த்திருக்கும்படி உயிர்ப்பிக்கப்பட்டவன். "நாம் காணாததை நம்பினோமாகில் அது வருகிறதற்கு பொறுமையோடே காத்திருப்போம்" ரோமர். 8:25.

நம்பிக்கை ஒரு நற்காரியத்திற்காக அக்கரையுடனிருக்கிறது. அது நன்மையானவைகளை எதிர்பார்த்திருப்பதால், பயத்தை தவிர்க்கிறது. பயம்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

தீமையை நோக்குகிறது, ஆனால் நம்பிக்கை நன்மையானதை நாடுகிறது.

நம்பிக்கை எதிர்காலத்தில் வரவிருக்கும் சந்தோஷத்தோடே தொடர்புடையது. சாதாரண சந்தோஷம் என்பது நாம் தற்காலத்தில் அனுபவிப்பது. ஆனால் நம்பிக்கை மூலமாகப் பெற்றுக்கொள்ளும் சந்தோஷம் நாம் எதிர்காலத்தில் அனுபவிக்க கூடியது.

நம்பிக்கை என்பது ஒரு நன்மை. அதை எட்டுவது கடினம். நம்பிக்கை ஆசையிலிருந்து வேறுபட்டது. ஆசை என்பது பலவீனமானதும், சீக்கிரம் கடந்து போகிறதுமாயிருக்கிறது. நம்பிக்கை உறுதியும் நிலையுமானது. அது கடினங்களோடு போராடி, நம்பினதைப் பெற்றுக்கொள்ளுமட்டும் விடாது செயல்படும்.

நம்பிக்கை நன்மையோடு தொடர்புள்ளதும் எளிதில் பெற்றுக்கொள்ளத்தக்கதாக திறந்து வைக்கப்பட்டதுமாகும். இங்கு நம்பிக்கை இழப்பிற்கு வாய்ப்பில்லை. நம்பிக்கையிழப்பு என்பது பொருட்களை கறுப்புக் கண்ணாடியில் பார்ப்பதை போன்றது. எனவே, எல்லாம் அந்தகாரமாகவும் இழந்துபோன உணர்வை ஏற்படுத்துவதுமாகவுமிருக்கும். ஆனால் நம்பிக்கை, உள்ளம் சோர்ந்து போகாமல் பாதுகாக்கிறது.

## நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்குமுள்ள வேறுபாடுகள்

நம்பிக்கையும் விசுவாசமும் இரு கிருபைகள். அவை ஒன்றுபோலவே தென்படுகின்றன. கேருபீன்களில் இரு செட்டைகளைப் போல் இவை நெருக்கமானவை, ஆயினும் அவை ஒன்றல்ல, இரண்டுமே வாக்குத்தத்தங்களை உணவாக கொள்பவை. துன்ப நாளில் ஆத்துமாவை ஆதரிக்க இந்த இரு கிருபைகளும் வேண்டும். துன்பமாம் அலைகடலில் கிறிஸ்தவன் மூழ்காமலிருக்க அவை மிதவைகளாய் செயல்படுகின்றன. சோர்ந்து போன ஆத்துமாவுக்கு மருத்துவ குணம் கொண்ட நீரைப்போல இளைப்பாறுதலை அளிக்கின்றன.

விசுவாசமும் நம்பிக்கையும் அவற்றின் வரிசையிலும் முக்கியத்துவத்திலும் வேறுபடுகின்றன. விசுவாசம் நம்பிக்கைக்கு முன்னாலே செல்லுகிறது, விசுவாசம் வாக்குத்தத்த நாட்டை விசுவாசிக்குக் காண்பிக்கிறது, நம்பிக்கை பொறுமையுடன் அதற்கு நேராகப் பிரயாணிக்கிறது. இவற்றை நாம் பிரித்துவிடகூடாது. ஏனெனில் நம்பிக்கை விசுவாசத்தையும், விசுவாசம் நம்பிக்கையையும் பலப்படுத்துகின்றன.

## கிறிஸ்தவனுடைய நம்பிக்கை என்ன?

அந்த ஆனந்த பாக்கியம்தான் கிறிஸ்தவனின் நம்பிக்கை. இவ்வுலகத்திலுள்ளவைகள் மாறுபடக்கூடியவை. ஆனால் நாம் எதிர்பார்க்கும் பாக்கியம் நம்பிக்கை என்னும் நங்கூரம். கடல் மாலுமியின் நங்கூரம் கீழ்நோக்கிப் போடப்படுகிறது. ஆனால் ஆனந்த பாக்கியத்திற்கான நம்பிக்கை பரத்தை நோக்கிப் போடப்படுகிறது. விசுவாசி ஐசுவரியமுள்ள சுதந்தரவாளி எபி.6:17. நம்பிக்கை தன் சிரசில் அரச கிரீடம் தரிப்பிக்கப்படுமட்டும் காத்திருக்கும்.

## கிறிஸ்தவ நம்பிக்கையின் நோக்கம்

மகாபெரிய தேவனுடைய மகிமையான பிரசன்னமும், அதோடு நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலும் இரு நோக்கங்களாகும்.

## உத்தம நம்பிக்கையின் குணாதிசயங்கள்

உத்தம நம்பிக்கை விசுவாசியை உயிர்ப்பிக்கக்கூடியது 1 பேது.1:3. மனித வாழ்வில் அது ஜீவனை அளிக்கிறது. அவன் கடமை செய்ய தூண்டுகோலாயிருக்கிறது. தொழிற்சாலையில் பயன்படுத்தும் சாணைக்கல்லைப் போன்றது. தேவசேனையின் வீரர்களை போருக்கு உற்சாகப்படுத்தும். இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வியாபாரிகளை கடினமான உழைக்கத் தூண்டுவது போல உழைக்கத் தூண்டும். தெய்வீக நம்பிக்கையானது கப்பலின் பாய்க்குக் காற்றைப் போலவும் ஓடும் வண்டிக்கு சக்கரம் போலவும் பயனுள்ளது. விசுவாசி தூய்மையில் வளர நம்பிக்கை தூண்டுதலாயிருக்கிறது. அது தேவகட்டளைப்படி நாம் ஓடச்செய்கிறது. கடின பாதைகளை நாம் கடந்து செல்லவும், கடினங்களை எதிர்த்து போராடவும், ஆபத்துக்களை எளிதாக்கவும், மரண பாதையில் வீரமாய் நடைபோடவும் கூடியது. தான் நம்பியதை பெற்றுக் கொள்ளும்வரை அது நிற்பதில்லை. அக்கினியைக் கடக்கவும் சிங்கக்கெபியில் போடப்பட்டாலும் அஞ்சாமலிருக்க நம்பிக்கை கிறிஸ்துவில் பலப்படுத்தும்.

## உத்தம நம்பிக்கை சுத்திகரிக்கும்

"...... அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்" 1 யோவான் 3:3. ஆத்துமாவிலுள்ள நம்பிக்கை ஆகாயத்தில் ஏற்படும் மின்னலுக்கு சமமானது. அது ஆகாயத்தைக் சுத்திகரிக்கிறது போல கிறிஸ்துவிலுள்ள நம்பிக்கை கிறிஸ்தவன் தன் நோக்கத்திலும் செயலிலும் பாவத்திற்கு எதிராக தன்னைக் காத்துக்கொள்ள ஏதுவாயிருக்கிறது. அவன் தன்னை 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' யாத்.28:36 என்று அர்ப்பணித்துக்கொண்டவன். அது அவன் இருதயத்தில் செதுக்கப்பட்டுள்ளது. நம்பிக்கை என்பது ஒரு புத்தம்புதிய கிருபை. அது ஆத்துமாவை வாழச் செய்கிறது. தூய்மையை ஒரு மரத்தின் வேருக்கும் நம்பிக்கையை அதில் வளரும் கிளைக்கும் ஒப்பிடலாம் என்கிறார் **பெனார்டு** என்பவர். உத்தம நம்பிக்கை தூய்மையாகிய வேரின் மேல் செழித்து வளரும்.

மாய்மாலக்காரன் தன்னிடம் நம்பிக்கை இருப்பதாக கூறலாம். ஆனால் அவனிடம் பரிசுத்தம் இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும். அசுத்தமாயிருக்கிற எவரும் பரலோக ராஜ்யம் செல்லும் நம்பிக்கை கொள்ள முடியாது. "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை" வெளி.21:27.

## உத்தம நம்பிக்கை நல்ல நம்பிக்கை

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மிடத்திலே அன்புகூர்ந்து, நித்திய ஆறுதலையும் நல் நம்பிக்கையையும் கிருபையால் நமக்குக் கொடுத்திருக்கிறார்....."

## உத்தம நம்பிக்கை விடாமுயற்சியுடையது

"கிறிஸ்துவே அவருடைய வீட்டிற்கு மேற்பட்ட குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும், மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்" எபி.3:6. நம்பிக்கை நாம் சகிக்க உதவியாயிருக்கிறது. புயலின் மத்தியில் நங்கூரம் ஒரு கப்பலைத் தாங்குவதுபோல் நம்பிக்கையும் காணப்படுகிறது. பொதுமக்களிடம் காணப்படும் கலவரங்களால் ஆத்துமா மூழ்கிவிடாமல் அது பாதுகாக்கிறது. "கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; வானமும் பூமியும் அதிரும்; ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும், இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாய் (நம்பிக்கை) இருப்பார்" யோவேல் 3:16. வானமும் பூமியும் அதிர்ந்தாலும் விசுவாசியின் நம்பிக்கை அசைவதில்லை.

யூதர்கள் பாபிலோனில் சிறைக்கைதிகளாயிருந்த போதும் அவர்கள் நம்பிக்கையுடனிருந்தனர். "நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள், இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்" சகரி.9:12. கிறிஸ்தவன் மரணப்படுக்கையில் இருக்கும்போது, வாழ்வின் நம்பிக்கை அற்றுப்போகும் வேளையிலும் தேவனிலுள்ள அவனது நம்பிக்கை எடுபட்டுப் போவதில்லை.

நம்பிக்கை தேவபிள்ளைக்கு சொல்லிமுடியாத ஆறுதலைத் தருகிறது. கடுமையான நாட்களிலும் நன்கு கட்டப்பட்ட அவனது நம்பிக்கை அவனை பெலப்படுத்தும். கிறிஸ்து வெளிப்படும்போது அது அவனது மகிமையான அனுபவமாயிருக்கும்.

வெளிப்படையான ஆறுதல் எடுபட்டுப்போகும் வேளையிலும் விசுவாசியிடம் மீதமாயிருப்பது நம்பிக்கை என்னும் நங்கூரம் என்று அவனே சொல்லுவான். இயேசு கிறிஸ்து அவனுக்காக ஆயத்தம் பண்ணப் போயிருக்கிற நித்திய வாசஸ்தலத்தில் அவனுக்கு உறுதியான நம்பிக்கை உண்டு யோவா.14:2. அவனது ஜீவனாயிருக்கிற கிறிஸ்து, வெளிப்படும்போது அவனும் அவரோடு மகிமையில் வெளிப்படுவான் கொலோ.3:4.

(5-ம் பக்கம் பார்க்க)

(4–ம் பக்க தொடர்ச்சி)

இது எவ்வளவு ஆறுதலைத் தருகிறது! சிலுவையின் பாரம் இனிமையாக்கப் படுகிறது! மாராவின் கசப்பு மாறி பரதீசின் ரசமாகிவிடுகிறது! வறட்சியின் காலம் நீங்கி அறுவடையின் மகிழ்வு!.

சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். "தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்" ரோமர் 5:2. பயம் துக்கத்தையும் நம்பிக்கை சந்தோஷத்தையும் பிறப்பிக்கும். தெய்வீக நம்பிக்கையில் சந்தோஷமுண்டு என்று **அகஸ்டின்** குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவன் பரத்தின் நம்பிக்கையுடையவனாயிருப்பதால் மகிழ்ந்து களிகூரும் தன்மை உடையவனாயிருக்கிறான். "நீதிமான்களின் நம்பிக்கை மகிழ்ச்சியாகும்" நீதி.10:28.

## நமது நம்பிக்கை மிக சமீபத்திலிருக்கிறது

"நெடுங்காலம் காத்திருக்குதல் இளைக்கப்பண்ணும்" நீதி.13:12 என்று சிலர் சோர்புடன் கூறலாம்.

ஆனால் நீண்டகாலம் செல்வதில்லை. "இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" வெளி.22:12. நாம் நம்பிக்கை வைத்திருக்கும் அந்த பலன் விசுவாசத்தின் கணக்கில் இருக்கிறது. விசுவாசம் எதிர்காலத்தை நிகழ்காலமாக்கித் தருகிறது. கிறிஸ்துவின் வருகை சமீபம்; பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரம் தோன்றியிருக்கிறது. தொலைநோக்கி மூலமாக தொலைவிலிருக்கும் ஒரு பொருள் கண்களுக்கு மிக சமீபமாய் பார்ப்பது போல, விசுவாசமானது கிறிஸ்துவையும் பரலோகத்தையும் அருகில் காணச்செய்கிறது. இந்த வாழ்விலேயே அவற்றைப் பெற்றுக் கொண்ட உணர்வைப் பெறலாம். எனவே மகிழ்ச்சியாயிருங்கள். உங்கள் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுங்கள். இன்னும் கொஞ்சக்காலத்தில் நீங்கள் நம்பியிருக்கும் ஆனந்தபாக்கியத்திற்கு பங்காளிகளாவீர்கள். கிறிஸ்து வெளிப்படுவது உண்மை. அது வெகுசீக்கிரம் என்பதும் உண்மை. "இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன்".

## நம்பிக்கையில் முன்னேறுங்கள்

பயம், சோதனை ஆகியவை நம்பிக்கைக்கு எதிரானவை. அவை உங்களில் சோர்பை உண்டாக்கும். அவற்றிலிருந்து உங்களை விலக்கி நம்பிக்கையை பலப்படுத்திக் கொள்ளுங்கள். நம்பிக்கையைக் கெடுக்கும் பிசாசின் செயல்களுக்கு இடங்கொடாதிருங்கள். போர்வீரனாக முழுமூச்சுடன் செயல்படுங்கள். அசையாத சீயோன் பர்வதம் போலிருக்க வேண்டுதல் செய்யுங்கள்.

இந்த நம்பிக்கை கர்த்தருடைய பணியில் உங்களை பெருகச் செய்கிறதா? பரலோக நம்பிக்கையில் வேரூன்றியிருப்பவர்கள் தங்கள் கடமையில் உற்சாகமாகவும், தேவனுக்காக வைராக்கியமாகவும் உழைப்பார்கள். மகிமையின் நம்பிக்கை அவர்களுக்கு உற்சாகத்தையும் ஜீவனையும் அளிக்கிறது. தேவ பணியில் வேகமாய் செயல்படுவோம். நம்பிக்கையோடு விதைப்போம். "நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" கலா.6:9.

நம்பிக்கையோடு தூய்மையையும் காத்துக்கொள்வோம். இவ்வாழ்விலேயே பரலோக வாழ்வை உடையவர்களாயிருப்போம். கிறிஸ்துவின் நல்மாதிரியைப் பின்பற்றுவோம். "அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தது போல தானும் நடக்க வேண்டும்" 1 யோவா.2:6. "......... எவ்விதத்திலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு பாத்திரமாய் நடந்து கொள்ளுங்கள்" பிலி.4:27.

# இயேசுவின் உண்மையான பிரசன்னம்

**The real presence of Jesus**

Adalph Saphir (1831-1891)

"இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன்" மத்.28:20.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ள இயேசு, தமது சீஷரோடு எல்லாக்காலமும் அவர் வருகை மட்டும் இருப்பதாக வாக்களிக்கிறார்.

இயேசு சர்வ வல்லவர், எனவே சர்வ வியாபி. அவர் இடங்களுக்கும் காலங்களுக்கும் ஆண்டவர். அனைத்து காலங்களும் அவருக்குரியவைகள். அவர் நித்திய பிதா, எனவே நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் எப்போதும் நம்மோடிருப்பவர். அவர் பரத்துக்கேறிச் சென்றுவிட்டாலும் எல்லாவற்றையும் நிரப்புகிறவர் எபே.4:9.

பழைய ஏற்பாட்டிலும் அடிக்கடி கூறப்படும் ஒரு வார்த்தை, "நான் உங்களோடிருக்கிறேன்" என்ற யெகோவாவின் குரல். அவர் யோசுவாவைப் பார்த்து, "..... நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன்" யோசுவா 1:5. தமது பிள்ளைகள் துன்பப்பட்டபோது அவர்களை இவ்வாறு ஆறுதல்படுத்தியிருக்கிறார். "நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை" ஏசா.43:2. காலம் நிறைவேறிய போது கர்த்தர் மக்களை சந்தித்து அவர்களை மீட்டார். மத்தேயு, கன்னியிடத்தில் பிறந்த கிறிஸ்து இம்மானுவேலாக நம்மோடிருப்பவர் என்று குறிப்பிடுகிறார். அவர் இன்று பரலோகத்தில் நமது பிரதான ஆசாரியராகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். இப்போதும், "இதோ நான் சதா காலங்களிலும் உங்களோடிருக்கிறேன்" என்கிறார்.

## நமது வழிகாட்டியும் நமது தோழனும்

அவரது வழிகாட்டுதலும் தோழமையும் நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். தேவகுமாரனாக இவ்வுலகில் வாழ்ந்த அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்தாலும் நமக்கு வழிகாட்டியாகவும் தோழனாகவும் தொடர்ந்து இருக்கிறார். தமது பிள்ளைகள் அனைவரையும் எப்போதும் அவர் நோக்கிக் கொண்டே இருக்கிறார். இரண்டு பேராவது மூன்று பேராவது அவரது நாமத்தில் கூடும் இடத்தில் அவர் பிரசன்னராயிருக்கிறார். அவர் சமாதானத்தை அருளுகிறவராக இருக்கிறார். அவரை நேசிக்கிற அனைவரோடும் அவர் இருக்கிறார். தூய ஆவியானவர் மூலமாக அவரது பிரசன்னம் வெளிப்படுத்தப்படுகிறது. அவர் தேவனும் மனிதனுமாயிருந்து நம்மோடு பங்குகொள்ளுகிறவராயிருக்கிறார்.

உலகத்திற்கு இது ஒரு புதிரான அனுபவம். ஆயினும் நமக்கு இது ஒரு ஆவிக்குரிய அனுபவம். ஆவியானவர் இந்த அனுபவத்தைத் தருகிறார். இது உண்மையான அனுபவம்.

கிறிஸ்து நம்மோடிருப்பது நமக்கு பெலனாயிருக்கிறது. அவரைச் சார்ந்திருப்பதால் நமது கஷ்டங்கள் மறைகின்றன. யோசுவாவிடம் தேவன், "நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு, திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்றார் யோசு.1:9.

நமது துன்பங்களிலெல்லாம் இயேசு நம்மோடிருக்கிறார். அவரிடமிருப்பது தெய்வீக மனதுருக்கம் மட்டுமல்ல சகோதர மானிட மனதுருக்கம். அவர் தமது உலக வாழ்வின் அனுபவங்களை நினைவுகூருகிறார். மனித இருதயங்களின் கண்ணீர்களையும் பயங்களையும் அவர் புரிந்து கொள்ளுகிறார். நாம் பூமியில் பாடுகளை அனுபவிக்கும் போது, அவர் நமக்காக பரத்தில் ஆசாரியனாக மன்றாடுகிறார். அங்கு பாவமும் துக்கமும் பிரவேசிப்பதில்லை. அவர் தேவனாகவும் நமது சகோதரனாகவும் காணப்படுகிறார். அவர் இங்கும் நம்மோடிருக்கிறார். இவர்தான் அன்று சாத்ராக், மேஷாக், ஆமெத்நேகோ ஆகியோர் அக்கினி சூளையில் போடப்பட்ட போது நான்காவது நபராக அவர்களோடு உலாவினார். அவர்கள் மேல் அக்கினி பலவந்தம் செய்யமுடியவில்லை. இது போலவே விசுவாசிகளை அவர்களது தொல்லைகளில் அழகாக வெளிக்கொண்டு வருகிறார்.

ஆத்துமா தனித்து விடப்பட்ட நிலையில் இயேசு நம்மோடிருக்கிறார். நமது ஆத்துமா சோர்ந்து அமைதலாகி விடும்போதும், அலைகள் நம்மீது மோதி பயமுறுத்தும் போதும் அவர் நம்மை மறந்து தூங்குவது போல் தோன்றினாலும் அவர் இம்மானுவேலாக நம்மோடிருக்கிறார். 'அற்ப விசுவாசி

(6–ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

களே!' என அழைத்து அவர் நம்மோடிருப்பதைக் காண்பிக்கிறார்.

சில வேளைகளில் மனம் சோர்ந்து ஆண்டவர் உயிர்த்தெழுந்ததை நம்பமுடியாமல் துக்கத்தோடிருந்தாலும் இயேசு நம்மோடிருக்கிறார். எந்த பாதை ஒடுக்கமாயிருந்தாலும் இயேசு அதன் வழியாகக் கடந்து நம்மிடம் வருவார். இதயத்தின் ஆழம் துக்கம் நிறைந்த தாயிருந்தாலும் அவர் நம்மிடம் 'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக' எனக் கூறுவார் யோவா.14:1.

பேதுருவை போல அவரை நாம் மறுதலித்தாலும் வேகமாக, மிக உருக்கத்துடன் நம்மைப் பார்த்து தமது பார்வையால் மனந்திரும்பச் செய்வார் சங்.32:8. இயேசு நம்மோடிருக்கிறார். மூன்று முறை மாம்சத்திலுள்ள முள்ளை எடுக்கும் படியாக விண்ணப்பம் செய்தும், அது எடுக்கப்படாவிட்டாலும், 'என் கிருபை உனக்குப் போதும்' 2 கொரி.12:9 என்று கூறி நம்மோடிருப்பார்.

### இயேசு நம்மோடிருந்தால் . . . . .

**1. இயேசு நம்மோடிருந்தால் எந்த குறைவும் நமக்கு இல்லை:-**

அவரது பிரசன்னம் மட்டுமே நமக்கு எல்லாமாயிருக்கிறது. அவரே நமது ஜீவன். அவர் எப்போதும் நம்மோடிருப்பவர். நமது ஜீவனுக்கு ஜீவனாயிருப்பது அவரே. எனவே அவர் நம்மோடு இருப்பது உண்மையிலும் உண்மை.

**2. அவர் நம்மோடிருந்தால் எல்லாவற்றையும் நம்மால் செய்யக்கூடும் :-**

'நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பயப்படாதே' என்று யோசுவாவுக்குக் கட்டளையிட்டார் நமது தேவன். அவர் நமது கர்த்தரும் நமது பெலனுமாவார். நமக்காகப் போராடினவர். நம்மிலிருந்து பலமாய் கிரியை செய்கிறவர். அவர் எப்போதாவது நினைவு கூரப்படுகிறவரல்ல. அவர் பயத்தின் காரணமாகவோ நன்றி செலுத்துவதற்காகவோ எண்ணப்படுகிறவரல்ல. அவர் எப்போதும் நம்மோடிருப்பவர். இதுவே கிறிஸ்தவனின் பெலன். நமது சோதனைகளிலும், கடமைகளிலும், துக்கங்களிலும், நம்மோடிருக்கிற அவரைச் சார்ந்து கொள்ள வேண்டும். அப்போது அவருடைய கிருபை நமக்குப் போதுமானதாயிருக்கும்.

**3.** ஒரு அமைதலான நதி போல நமது வாழ்வு அமைய வேண்டும். அது தொடர்பாக, உறுதியுடன் இசைவுடன் நீர் பெருகி பெருகி அழகுடன் இருபுற முள்ள கரைகளைச் செழிப்பாக்கி அதனால் மக்களை சந்தோஷப்படுத்தி இறுதியாக எல்லையற்ற கடலில் விழுகிறது. நமது வாழ்வும் இவ்வாறு மற்றவர்களுக்குப் பயன்படுவதாகவும், சந்தோஷத்தை அளிப்பதாகவும் இறுதியில் தேவன் ஆயத்தம் பண்ணின எல்லையற்ற ஆசீர்வாதத்தில் முடிவதாகவும் இருக்க வேண்டும். இயேசு நம்மோடிருப்பதால் எந்த நாளும் கவலையோ சந்தேகமோ குளிர்ந்த நிலையோ நம்மில் காணப்படவேண்டாம். அவை பாவத்தோடும் உலகத்தோடும் தொடர்புடையவை. நமது வாழ்வு அனுதினமும் கிறிஸ்துவின் வாழ்வாயிருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலின் மாதிரியைப் பார்ப்போம். அவர் ஆண்டவரின் தரிசனத்தைப் பெற்ற நாள் முதல் அவரையே பின்பற்றினார். 'சதாகாலமும் உங்களுடனிருக்கிறேன்' என்று சொன்ன ஆண்டவரை மட்டும் அவர் பின்பற்றினார். கிருபையினால் தனக்கு தரிசனம் கொடுத்த ஆண்டவரை அந்நேர முதல், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன்" என்று சொல்லி ஓட்டத்தை முடிக்கும் வரை பின்பற்றினார். அவர் ஒருபோதும் பின்னிட்டுத் திரும்பவில்லை. சோர்படையவுமில்லை. துக்கங்கள், பாடுகள், அந்தகாரம் நிறைந்த பயங்கள் யாவற்றையும் அவர் சந்தித்தார். மரணம் அவரைத் தொடர்ந்தது. ஒவ்வொரு நாளும் மரணத்தின் அனுபவங்கள் ஏற்பட்டன. ஆனாலும் இயேசு அவரோடிருந்தபடியால் உயிர்த்தெழுதலின் சந்தோஷம் அவரில் காணப்பட்டது.

**4. இயேசு நம்மோடிருப்பதால் பரலோகம் நம்மில் ஆரம்பித்துவிட்டது :-**

ஏனெனில் ஆண்டவரோடு வாழுவது ஆசீர்வாதமான நித்திய வாழ்வு. இயேசு நித்தியமானவர், எனவே நாமும் அவரோடு நித்தியமாக வாழலாம். அவரோடு வாழ்வதால் எதிர்கால ஆசீர்வாதங்களை அவரது சமூகத்தில் இப்போதே அனுபவிக்கலாம். இந்த அந்தகார உலகில் அவர் நமது ஒளியாயிருக்கிறார். மரண இருளின் பள்ளத்தாக்கிலும் நித்திய நகரத்திலும், பரம எருசலேமிலும் அவர் நம்மோடு இருக்கிறவர். அவரே தேவ ஆட்டுக் குட்டி, நல்ல மேய்ப்பன், விசுவாசிகளின் ஆண்டவர். பூமியிலே அவர் ஆளுகிறவர், பரலோகத்திலும் பரிசுத்த வான்களோடு ஆட்சி செய்கிறவர். அவரது ஆட்சிக்கு முடிவில்லை.

### முடிவு வந்து கொண்டிருக்கிறது

இயேசு முடிவு மட்டும் நம்மோடிருப்பவர். ஆனால் முடிவு இல்லை. உலகத்திற்கு ஒரு நியாயத்தீர்ப்பு உண்டு. ஆனால் உலகம் அதைக்குறித்து நிர்விசாரமாயிருக்கிறது. கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவை புறக்கணிப்பவர்களுக்கான ஆபத்தான காலம் சமீபித்து விட்டது. பூமியையும் வானத்தையும் படைத்த தேவனை விசுவாசிக்கிற நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பது அவசியம்.

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற அனேகருடைய வாழ்விலும் குளிர்ந்த நிலைதான் காணப்படுகிறது. மட்டுமல்ல, அவர்கள் சிலுவைக்கு எதிரிகளுமாயிருக்கிறார்கள். ஆனாலும் கிறிஸ்து நம்மோடிருப்பதால் நாம் தைரியத்துடன் முன்னேறுவோம்.

### இயேசு நமது நம்பிக்கையும் எதிர்காலமுமாயிருக்கிறார்

இயேசுவே அல்பாவும் ஒமேகாவுமானவர். அவர் பரத்திலிருந்து வர நாம் காத்திருக்கிறோம். அவர் வரும்போது அவரை நாம் மகிமையில் தரிசிப்போம். இப்போது அவர் நம்மோடிருப்பதுபோல என்றும் அவரோடு வாழுவோம்.

விசுவாசிக்கிற இருதயம் 'இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் உங்களோடிருக்கிறேன்' என்பதற்குப் பதிலாக 'ஆமென்' என்று சொல்லுவோம். ஆமென் என்பது உத்தம சாட்சிக்குரிய வார்த்தை. மகிழ்ச்சியோடே நாமும் ஆமென் என்போம். நமது அனுதின வாழ்வில் அவருக்காகவும் அவருடைய சுவிசேஷத்திற்காகவும் சாட்சியாக வாழுகிற நாம் 'கர்த்தராகிய இயேசுவே வாரும் ஆமென்' என்போம்.

## நான் ஏன் தேவனால் அதிகமாக பயன்படுத்தப்படவில்லை?

***Why am I not more used of God***

Keith Brooks (1888-1954)

நாம் வாழும் இக்காலத்திற்கு ஏற்ற ஒரு உவமையை ஆண்டவர் கூறியிருக்கிறார். பத்துக் கன்னிகைகளைக் குறித்த அந்த உவமை மத்.25:1-10 வசனங்களில் கூறப்பட்டுள்ளது. மணவாளனோடு செல்ல தகுதி பெற்றவர்கள், பாதி ராத்திரியிலே பாதை காண்பிக்க வெளிச்சம் தரும் விளக்குகளையும் அதோடு பாத்திரத்தில் எண்ணையையும் வைத்திருந்தவர்கள் மட்டுமே.

இன்று பேர்க்கிறிஸ்தவர்களாக வாழுகிறவர்களுக்கு திடுக்கிடும் செய்தி இங்கு இருக்கிறது. எண்ணெய் வராத வரண்ட திரியுடன் கூடிய விளக்குகளை நமது கரத்தில் பிடித்திருப்பதால் என்ன பயன்? தேவ பயத்தின் தோற்றம் மட்டும் இருந்தால் போதாது. வல்லமையில்லாவிட்டால் பயனில்லை 2 தீமோ.3:5-ல் தேவபக்தியின் வேஷத்தைக் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்கள் என்று வாசிக்கிறோம். வேதபுஸ்தகத்தைக் கரங்களில் வைத்திருக்கும் அநேகர் தூய ஆவியின் வல்லமையைத் தங்கள் வாழ்வில் பெறவில்லையே.

தூய ஆவியானவரின் ஆளுகை தனிப்பட்ட பாதுகாவலுக்காக மட்டும் உரியதல்ல. அது ஒருவரை கிறிஸ்துவுக்காக பயனுள்ள சாட்சியாக மாற்றக் கூடியது யோவா.7:38-39. இந்த கிருபையின் காலம் முடிவுறும் காலத்தில் கர்த்தர் கூறுவது : "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்" என்பதாகும்.

தூய ஆவியானவர் ஒருவரே பாவ உணர்வை ஏற்படுத்தி, ஆத்துமாக்களை மறுரூபப்படுத்த முடியும். படிப்பின் பெருமை, திறமைகள், நபரத்துவம் ஆகியவற்றின் பெருமை மக்களில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியவை.

(7-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

*தேவன் எளியவர்களைக்கொண்டு மிகப்பெரிய காரியங்களைச் செய்கிறவர். பலவீனரைக் கொண்டு பலவான்களைத் தாழ்த்துகிறவர். கல்வியறிவற்றவர்களைக் கொண்டு, தமது பணிகளை நிறைவேற்றி கல்வியாளர்களைத் தோல்வியடையச் செய்கிறவர். ஏனெனில் அவர்கள் தங்களை வெறுத்து ஆவியானவருக்கு முக்கியத்துவம் அளித்தவர்கள்.*

*பரிசுத்த வாழ்வு, தேவ சேவை, ஆவிக்குரிய செழிப்பு ஆகியவற்றிற்குக் காரணர் தூய ஆவியானவர். தாவீதைப் போல கோலியாத்தைக் கொன்றவர்கள் தங்கள் இருதயத்தில் இயேசுவுக்கு சிங்காசனமளித்து, ஆவியானவருக்குத் தங்களை வளைந்து கொடுக்கும் கருவிகளாக அர்ப்பணித்தவர்களென்று கூறுவதில் தவறில்லை ரோமர் 6:13.*

*இந்த சத்தியத்தை அறிந்து கொள்ளுவது மிக முக்கியம். பிசாசானவன் தனக்கு இன்னும் கொஞ்சகாலமே உண்டென்று அறிந்து (வெளி.12:13) மனிதனை வழிமாறச் செய்து, படுகுழியிலிருந்து பிசாசுகளை அவிழ்த்துவிடுகிறான். மணவாளன் வரும் காலம் நெருங்கி விட்டது. ஆனால் மக்களோ ஆவிக்குரிய இருளில் தடவிக் கொண்டிருக்கின்றனர். சபை தன் சாட்சியை இழந்து நிற்கிறது. கிறிஸ்தவர்கள் பல் வேறு நற்பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் கரங்களிலிருக்கும் விளக்குகளில் எண்ணெய் இல்லை. ஏதோ அங்கொன்று இங்கொன்றுமாக ஆவியால் நிரப்பப்பட்ட மக்கள் தேவ வல்லமையால் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை நடத்துகின்றனர்.*

*உடல் வளர்ச்சியுள்ள மக்களை உருவாக்க வேதம் போதிக்கவில்லை. அர்ப்பணமுள்ள மக்களே தேவனுக்குத் தேவை. தனிப்பட்ட தகுதிகள் இல்லாதவர்களாயினும் தங்களை முற்றிலும் அர்ப்பணிக்கிறவர்களைக் கொண்டு அசாதாரணமான செயல்களை தேவன் செய்யக்கூடியவர்.*

*"வல்லமை தேவனுடையது" சங்.62:11. கிறிஸ்துவின் பணி மனோதத்துவ வலிமையாலோ, மாம்ச பெலனாலோ செய்யக்கூடியதல்ல. உங்கள் விளக்கில் எண்ணெய் இருக்கிறதா? நீங்கள் வேதவசனத்தின்படி ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறீர்களா? இது ஒரு கட்டளை எபேசி.5:18. 'கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்' எபேசி.6:10. தேவன் தமது பிள்ளைகள் வல்லமையுள்ளவர்களாகவும் பயனுள்ளவர்களாகவும் இருப்பதையே விரும்புகிறார்.*

*'தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும், என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்; வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்' சங்.139:23-24. ஆத்துமா சுயத்தினால் நிரம்பியிருந்தால் ஆண்டவருக்கோ, அவரது சத்துவத்தின் வல்லமைக்கோ அங்கு இடமிருப்பதில்லை. கர்த்தரின் மகிழ்ச்சி நம்மை நிரப்ப வேண்டும். அவர் பெருகவும் நாம் சிறுகவும் வேண்டும் யோவா.3:30.*

*தூய ஆவியானவரின் வல்லமையை இழந்தவர்களாக நாம் நிற்கிறோம். அவருக்கு நாம் நம்மை முற்றிலும் அர்ப்பணித்திருந்தால் சோதனைகளில் நாம் சோர்ந்திருக்கமாட்டோம். பயம் நம்மை மேற்கொண்டிராது, கடமைகளில் தவறியிருக்கமாட்டோம்.*

*அப்போஸ்தலர் காலத்தில் ஆவியானவர் விசுவாசிகளுக்குள்ளே இறங்கியபோது கிறிஸ்துவின் பிரசன்னத்தை அவர்கள் உணர்ந்தார்கள். அவர்கள் வாழ்வின் அனைத்துப் பகுதிகளும் கிறிஸ்து ஜீவிக்கிற சத்தியமாக நிரம்பி விட்டார்.*

*இந்த அனுபவம் எந்த உத்தம விசுவாசிக்கும் குறைக்கப்படுவதில்லை. அனைவரும் கிறிஸ்துவின் உணர்வால் நிரப்பப்படுகின்றனர். அவர்களில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தவும், நித்திய வல்லமையின் ஊற்றோடு தொடர்பை ஏற்படுத்தவும் அவர் காத்துக்கொண்டே இருக்கிறார்.*

*இதைக் குறித்து சிந்திக்க ஆயத்தமா? இந்த பரிபூரண வாழ்வை அறிவீர்களா? நான் ஏன் இன்னும் அதிகமாக பயன்படுத்தப்படவில்லை என்று எப்போதாவது தேவனிடம் கேட்டு பதில் பெற்றதுண்டா?*

*அவர் உங்களை விசேஷித்தவர்களாக ஆக்குகிறார். உங்கள் வாழ்வில் தொடர்புகொண்டு கிறிஸ்துவின் பிரசன்னத்தால் நறுமணமுடையதாக்குவார். அவர் சமாதானத்தாலும் சந்தோஷத்தாலும் உங்களை நிரப்புவார். பரலோக அறையில் வாசம் பண்ணுவதுபோன்ற உணர்வை பெறுவீர்கள்.*

*பிந்திப்போகுமுன்னே உங்கள் பாத்திரத்தை எண்ணெயால் நிரப்புங்கள். பரிசுத்த ஆவியானவரோடு நேரடி தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமான ஜீவபலியாக ஒப்புகொடுங்கள். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை ரோமர் 12:1.*

**என் தெய்வீக ஆண்டவரே,**
**உமது பலிபீடத்தில் இன்று நான் படைத்த பரிசுகளை**
**இயேசுவின் நிமித்தம் ஏற்றுக் கொள்ளுமே**
**உமது ஆலயத்தை அலங்கரிக்க என்னிடம் ஆபரணங்களில்லை**
**உலகப் பிரசித்திபெற்ற பலிகளுமில்லை**
**எனது நடுங்கும் கரங்களால்**
**எனக்கு மிகவும் சிறியதாக தோன்றும் எனக்குரியவைகளை**
**நீர் மட்டும் புரிந்து கொள்ளக்கூடியதனை**
**எனக்குரிய யாவற்றையும் படைத்துவிடுகிறேன்.**

**நமது** தலையாய **கடமை** நாமே
எழுப்புதலடைவதாகும்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

## II. அறிவிப்புகள்

1. வருகையின் தூதன் பத்திரிகையின் 1-ம் பக்கம் மேல் பகுதியில் அச்சிடப்பட்டிருக்கும் சந்தா ரூ.1/- என்பதும், 8-ம் பக்கம் கடைசியில் அச்சிடப்பட்டிருக்கும் அத்தனை விபரங்களும், முகவரியும் அரசாங்கத்திற்காக அச்சிடப்படுகிறது.

   வாசகர்கள் தயவாய் **2-ம்** பக்கத்திலுள்ள அறிவிப்புகளையும், முகவரிகளையும், வங்கி விபரங்களையும் **மாத்திரம்** பயன்படுத்தும்படி மிகவும் அன்பாய் கேட்கிறேன்.

2. **நியூபோர்ட் தெரு பெயர் வந்த விபரம் :** மேலை நாட்டு மிஷனெரி போதகரான Rev.நியுபோர்ட் ஐயர் (Rev. Newport) பெயரால் இந்த தெரு அழைக்கப்படுகிறது என்பதை வாசகருக்கு அன்பாய் அறிவிக்கிறேன்.

3. மணியாடர் அனுப்பும்போது உங்கள் தொலைபேசி எண்ணை எழுதுகிறீர்கள். அதுபோல உங்கள் **பத்திரிகை பதிவு எண் கட்டாயம் எழுதுங்கள்.**

4. காசோலைகளில் ஏதாவது அடித்தல் திருத்தல் செய்தால் சுருக்கமான கையெழுத்து போட்டால் போதும் என்கிற ஒழுங்கு காலாவதி ஆகிபோனது. தற்போது காசோலைகளில் அடித்தல், திருத்தல் செய்தால் திருப்பி அனுப்பிவிடுவார்கள். எங்கள் வங்கி கணக்கில் பிடித்தமும் செய்வார்கள். சமீபத்தில் அப்படிப்பட்ட ஒரு சம்பவம் ஊழியத்தில் ஏற்பட்டபடியால் உங்களுக்கு அன்பாய் அறிவிக்கிறேன்.

5. காசோலைகளில் **வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)** என்று மட்டும் எழுதுங்கள்.

   **உங்கள் காசோலைகளில்-**
   ஆசிரியர், Editor, தூதன்
   எங்கள் வங்கி A/c. No., IFS Code

   உங்கள் முகவரி, பத்திரிகை பதிவு எண் போன்ற எதையும் எழுதாதீர்கள்.

உங்கள் விபரங்களை காசோலையோடு நீங்கள் அனுப்பும் கடிதத்தில் எழுதினால் போதும். எங்களுடைய ஒவ்வொரு வங்கி கணக்குக்கும் தனித்தனி Register வைத்துள்ளோம். அதில் உங்கள் முகவரி, வங்கி, காசோலை எண், தேதி உட்பட அனைத்தையும் உடனே நாங்கள் பதிவு செய்கிறோம். உங்கள் **மொபைல் எண்ணை** கட்டாயம் எழுதுங்கள். உடனே உங்களை தொடர்பு கொள்ள அது உதவியாயிருக்கும்.

ஒருவர் அனுப்பிய காசோலையில் -
**Pay வருகையின் (சந்தா) தூதன்**
என்று எழுதியிருந்தார், அது செல்லாது.

**புதிய முகவரி பட்டியல்**

*சுமார் 50 ஆண்டுகள் பழைய முகவரி பட்டியலையே இன்னமும் பயன்படுத்தி வருகிறோம். அதில் அநேகர் எந்தவித உதவியும் செய்வதில்லை. அநேக ஆண்டுகளாக சந்தா அனுப்பி பழகினவர்களை மாற்றவே முடியவில்லை.* **ஊழியத்தின் அநேக தேவைகள் சந்திக்கப்படாமலேயே இருக்கிறது.**

*அன்பானவர்களே, உங்களில் ஒருவருக்காவது பத்திரிகை நிறுத்தப்படக் கூடாது என்பதற்காக கெஞ்சி கேட்கிறேன். கடந்த வருடத்தைப் போல வாசகர்கள் இன்னமும்* **வருடத்திற்கு ஒருமுறை ரூபாய் 100, 200, 300 என்று அனுப்பாதீர்கள்.**

### 2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1. மாதந்தோறும் ஊழியத்தை தாங்குங்கள்.
2. இயலாதவர்கள் வருடத்திற்கு ஒருமுறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
3. வருடத்திற்கு ஒருமுறையாவது உங்கள் வீட்டு மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளின்போது உதாரத்துவமான காணிக்கை அனுப்புங்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

### உதாரத்துவமாய் கொடுங்கள்

"அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.

### திராணிக்குத்தக்கதாகவும் திராணிக்கு மிஞ்சியும் கொடுங்கள்

"மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்." 2 கொரி. 8:2,3.

### ஆஸ்திகளால் ஆண்டவருக்கு ஊழியஞ் செய்யுங்கள்

"ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்" லூக்கா 8:3.

## III. ஆலோசனை

உங்களில் சிலர் நாங்கள் ஏழைகள், எங்களால் மாதந்தோறும் காணிக்கை அனுப்ப இயலாது என்று எண்ணுகிறீர்கள். வருகையின் தூதன் வாசிக்கிற சகோதரி ஒருவர் அநேக ஆண்டுகளாக மாதந்தோறும் ரூபாய் 10 மணியாடர் மூலமாக அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் ஏழைதானே! தற்சமயம் அடிக்கடி ரூபாய் 50 அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

உங்களுக்கு என்ன எழுதலாம் என்று ஜெபத்தோடு ஆலோசித்த பொழுது, எனக்கு வந்த ஒரு ஆவிக்குரிய பத்திரிகையின் செய்தி என் கண்களில் பட்டது. "**தேவனுக்கு சித்தமானவைகளில் தேறுதல்**" என்ற பெரிய கட்டுரையில் 6 சின்ன தலைப்புகள் உள்ளது. அதில் ஒன்றை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன்.

### கொடுப்பதில் தேறுதல்

"அவர்கள் (**மக்கதொனியா சபையார்**) மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரம் உடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள். மேலும் நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், **தேவனுடைய சித்தத்தினாலே** முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்" (2கொரி.8:1-5). அப்போஸ்தலனாகிய பவுல் மக்கதொனியா சபையாரைக் குறித்து கொரிந்து சபையாருக்கு எழுதும்போது, இச்சபையார் தேவசித்தத்தின்படியே உதாரத்துவமாய் கொடுப்பதில் தேறினவர்களாக இருந்தனர் என்று கூறுகிறார். தேவனிடமிருந்து அளவில்லாமல் பெற்றுக் கொள்ள ஒரே வழி '**கொடுப்பது**'. "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்" (**லூக்.6:38**) என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இது வாக்குத்தத்தமுள்ள புதிய ஏற்பாட்டின் கற்பனைகளில் ஒன்று. இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் ஒன்றாகிலும் பொருளற்றதல்ல. நாம் தேவசித்தத்தில் தேற வேண்டுமானால் உதாரத்துவமாக கொடுப்பதில் தேற வேண்டும். நாம் தேவனுடைய ஊழியத்திற்கும் தரித்திரருக்கும் கொடுத்து பழக வேண்டும். எனவே கொடுத்து தேவனிடமிருந்து நிறைவான ஆசீர்வாதங்களைப் பெற்று தேவ சித்தத்தில் தேறுவோமாக. கொடுக்கும் சிந்தையை தேவன் தாமே நமக்கு தந்தருளுவாராக.

* * * * *

வழக்கமாக வாசகர் கடிதங்களை ஆசிரியர் கடிதத்தில் முதலாவது அச்சிடுவதை அறிவீர்கள். இம்மாதம் வழக்கத்திற்கு மாறாக வாசகர் கடிதங்களை இறுதியாக அச்சிட்டு கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

**1.** 04.06.2021

அன்புள்ள ஐயா,

நான் தங்கள் பத்திரிகையை மாதந்தோறும் படித்து வருகிறேன். தங்களின் தூதன் தவறாமல் எனக்கு கிடைக்கிறது. தங்களின் தேவையை அறிந்து அடியேன் 01.06.2021-ல் தங்கள் பத்திரிகைக்கு ரூபாய் 500 அனுப்பியுள்ளேன். தாங்கள் எனக்காகவும் என் குடும்பத்திற்காகவும் ஆண்டவர் இயேசுவிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.

TN 01643, வள்ளியூர்

**2.** e-mail வழியாக கடிதம் அனுப்பிய அன்புத் தம்பி, நான் நம்புகிறபடி 2016-ம் ஆண்டு மதுரையில் நடந்த 7 மணி நேர உபவாச ஜெபத்தில் மேடையில் எனக்கு அருகில் அமர்ந்திருந்தார். அவர் தகப்பனார் காலத்தில் '**என் நேசரின் சத்தம்**' நான் விரும்பி படிக்கிற பத்திரிகைகளில் ஒன்று. கடிதத்துக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். அன்புத் தம்பியை உள்ளத்தில் நேசிக்கிறேன்.

கடிதத்தை மொழிபெயர்க்க விரும்பவில்லை. கேட்கிறதற்கு **காதுள்ளவன் கேட்கக்கடவன்** மத்.11:15; 13:9; மாற்கு 9:4,23; லூக்கா 14:35.

**Reg. : Offering to the magazine ministry**

Dear ayya, Greetings to you in the sweet name of the Lord Jesus Christ.

First of all I thank you for sending magazine every month without fail. God bless you and your ministries.

I read carefully everything which was written in the magazine, and I got energy while I read it. Thank you so much.

I know it's very hard to do it. Hard to publish, hard to spend our Godly money to it. It's only possible with the help of the Lord and His grace alone.

We are also can't able to send our monthly magazine "En Nesarin Sattham" due to the financial lack and there's no concession postage. So I publish two month once. Kindly pray for it.

Kindly pray for me that I was affected by the corona virus for about a month. Now I am feeling better and getting healing day by day. Kindly pray for complete recovery.

And I was insisted by the Holy spirit while was reading your magazine, so I sent small offering Rs.500/- on 04.05.2021 (IMPS Ref no. 112421671188) via Net Banking to your Punjab National Bank, for your magazine ministry.

Thank You.

Continually I am praying for you all.

Kindly remember us in your prayers.

May God bless you all

ஆண்டவருக்கு சித்தமானால் அடுத்த மாதம் ஆசிரியர் கடிதத்தில், **ஆண்டவர் இயேசுவை போல ஜெபிப்பது எப்படி?** என்று எழுதுவேன்.

***"Prayer is spending time with the LORD"***

ஆண்டவர் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.


| | | |
|---|---|---|
| உதவி | : 94897 40295 | உங்கள் சகோதரன், |
| அலுவலகம் | : 95432 21008 | **வெஸ்லி தேவதாசன்** |
| சமயம் | : 10 - 01; 02 - 06 | (WESLEY DEVADASON) |


***PRAYER is a place of resting in God's presence***


**Contact:**

**VARUKAYIN THOOTHAN**
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
**SOUTH INDIA.**

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com


### சிந்தனைக்கு

விட்டுக்கொடுத்தல் என்ற பலவீனத்தினிமித்தம் அனேக **சபைகள்** இன்று உலகத்திற்குரியதாகிவிட்டன. அதாவது உலகத்திலிருப்பது போன்ற பல **பாவங்கள்** சபைக்குள் பரவிக் கிடக்கின்றன.

**உப்பாகவும் ஒளியாகவும்** தூய்மையுடன் மாதிரியாக வாழும்படி அழைக்கப்பட்ட **சபை** தன் தனித்தன்மையை இழந்துவிட்டது.

**நம்பிக்கையும் விசுவாசமும்** இரு கிருபைகள். துன்பமாம் அலைகடலில் கிறிஸ்தவன் மூழ்காமலிருக்க அவை மிதவைகளாய் செயல்படுகின்றன. சோர்ந்து போன ஆத்துமாவுக்கு மருத்துவ குணம் கொண்ட நீரைப்போல இளைப்பாறுதலை அளிக்கின்றன.

புயலின் மத்தியில் நங்கூரம் ஒரு கப்பலைத் தாங்குவதுபோல் **நம்பிக்கையும்** காணப்படுகிறது.

தங்களைக் **கிறிஸ்தவர்கள்** என்று சொல்லிக் கொள்ளுகிற அனேகருடைய வாழ்விலும் குளிர்ந்த நிலைதான் காணப்படுகிறது. மட்டுமல்ல, அவர்கள் சிலுவைக்கு எதிரிகளுமாயிருக்கிறார்கள்.

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*